BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# நாலடியாடியார் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்
# The Life Values by the Naladiyar

**க. பச்சியப்பன்**, எம். ஏ. எம்.ஃபில்.,

முனைவர்பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்), தமிழ்த்துறை, உ. நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி- 601204, தமிழ்நாடு,

**K. Pachiyappan**, M. A., M.Phil.,

Researcher (Part Time), Tamil Department, L. N. Government College, Ponneri- 601204, Tamil Nadu, India.

E.Mail: pachiyappank77@gmail.com, Mobile; 8870096041.

**Abstract**

The Naladiyar virtues include values such as non-violence, charity, education, friendship, patience, emphasis on morality, and lack of anger. The word virtue refers to justice. Goodness, honesty, character. Duty and truth can also be considered virtue. Values are those that encourage one to seek and adhere to ideals in life. Do not commit sins, do virtue, and not giving to strangers is worse than death. The act of a giver who expects benefit from what he gives to others is not good. He should give what he can give to those who come to him and ask. The great and motivated are able to complete the work they have undertaken, and they tolerate anger. Even if the ignorant say low words, the great do not get angry and do not utter such low words with their mouths, etc. It highlights the values of life.

**Key Words:** Naladiyar, life values, virtue, charity, noble people

**ஆய்வுச் சுருக்கம்**

நாலடியாரில் நிலையாமை, ஈகை, கல்வி, நட்பு, பொறையுடைமை, அறன் வலியுறுத்தல், சினம் இன்மை போன்ற விழுமியங்கள் காணப்படுகின்றன. அறம் என்ற சொல் நீதியைக் குறிக்கும் சொல்லாகும். நன்மை, நேர்மை, குணம். கடமை. உண்மை என்றும் அறத்தினைக் கருதலாம். வாழ்க்கைச் சூழலில் இலட்சியங்களைத் தேடுமாறும், கடைபிடிக்குமாறும் தூண்டுபவை விழுமியங்கள் ஆகும். பாவம் செய்யாதீர்கள், அறம் செய்யுங்கள், மரணத்தைவிடக் கொடுமையானது, இருந்தும் இரப்போர்க்குக் கொடுக்காதிருத்தல் ஆகும். தாம் பிறர்க்குக் கொடுப்பதினால் நன்மை விளையும், பயனை எதிர்பார்த்துக் கொடுப்பாரின் செயல் சிறந்ததாகாது. தம்மிடம் வந்து கேட்பவர்களுக்குத் தம்மால் கொடுக்கக்கூடிய பொருளைக் கொடுக்க வேண்டும். தாம் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்றி முடிக்கவல்ல ஊக்கமுடைய பெரியவர்கள், கோபத்தை பொறுத்துக் கொள்வர். அறிவற்றோர் கீழான சொற்களைக் கூறினாலும், மேன்மக்கள் கோபம் கொள்ளாமல் தம் வாயால் அத்தகைய தாழ்ந்த சொற்களைக் கூற மாட்டார்கள் முதலிய வாழ்வியல் விழுமியங்களை எடுத்துக் கூறுகிறது.

**குறிச்சொற்கள்:** நாலடியார், வாழ்வியல் விழுமியங்கள், அறம், ஈகை, மேன்மக்கள்

## முன்னுரை

விழுமியம் என்ற சொல் விரிந்த பொருளுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். நீதிநூல்களும் ஒன்றாக விளங்கும் நாலடியாரில் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பல அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றை மனிதகுலம் பின்பற்றி, தம்முடைய வாழ்க்கை முறைகளில் செயல் படுத்தினால் இன்பமாக வாழ முடியும். நாலடியாரில் நிலையாமை, ஈகை, கல்வி, நட்பு, பொறையுடைமை, அறன் வலியுறுத்தல், சினம் இன்மை போன்ற விழுமியங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## விழுமியம் - பொருள் விளக்கம்

சமுதாயத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் பொங்கித் ததும்ப வேண்டுமெனில் ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று சில கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்பே விழுமியம் என்று கூறப்படுகின்றது. மனிதனின் நடத்தையையும் அறச்செயல் முறைகளையும் விழுமியம் என்று கூறலாம். மதிப்புகள் மனித வாழ்வின் வினை ஊக்கிகள், நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை வாழ்வைத் தூண்டும்போது பாதைகள் பன்னீர்ப் பூக்களை மலரச் செய்கின்றன என அல்போன்ஸ் கூறுகிறார்.

**விழுமியத்தின் தன்மை**

மனித சிந்தனை, உணர்வு செயல்களின் மீது செல்வாக்குச் செலுத்துகிறது. சரியானவற்றைச் செய்யுமாறு நெறிப்படுத்துகின்றது. அவர்களை மனிதர்களின் செயல்கள் வலிமை மிக்கவர்களாக ஆக்குகின்றன: வாழ்க்கைச் சூழலில் இலட்சியங்களைத் தேடுமாறும், கடைபிடிக்குமாறும் தூண்டுபவை விழுமியங்கள் ஆகும்.

**அறம் விளக்கம்**

அறம் என்ற சொல் விரிந்த பொருளுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். அறம் என்ற சொல் நீதியைக் குறிக்கும் சொல்லாகும். நன்மை, நேர்மை, குணம். கடமை. உண்மை என்றும் அறத்தினைக் கருதலாம். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைச் சிவம் என்று வழங்கினால் அதன் இயக்கத்தை செயலை, செயலாற்றலை, அருளை, அறம் எனலாம். தமிழ் இலக்கியங்களில் அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன என ந.சுப்பு ரெட்டியார் கூறுகின்றார்.

**அறம் வலியுறுத்தல்**

செல்வத்தினால் தான் மேன்மை அடைய முடியும் என நினைத்து அறச்செயல்களைச் செய்ய மறத்தல் கூடாது. பாவம் செய்யாதீர்கள், அறம் செய்யுங்கள், இறைவனுடைய பேரின்பத்தை நுகருங்கள் என மூன்று அறிவுரைகளைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அறம் வலியுறுத்தப்படுவதினைப் போல நாலடியாரிலும்,

*"அரும் பெறல் யாக்கையை பெற்ற பயத்தால்*
*பெரும்பயனும் ஆற்றவே கொள்க கரும்பு ஊர்ந்த*
*சாறுபோல் சாலவும் பின் உதவிமற்று அதன்*
*கோது போல்போகும் உடம்பு"*

*(நாலடியார்,34)*

என இவ்வுடம்பானது அழியும் தன்மையினை உடையது என்றும் இவ்வுடம்பினால் செய்த அறமானது அழியாது பல்லாண்டு காலம் நிலைத்திருந்து பெரும் பயனைத் தருகின்றது.

**அறத்தின் பயன்**

மனிதப் பிறவி எடுப்பதினால் பலப்பல நல்ல காரியங்களைச் செய்யலாம். அவற்றைச் செய்யாமல் விட்டுவிட்டு இந்த உடம்பே பெரிது என்று நினைக்கக் கூடாது. உடம்பினைப் பேணிக் கொண்டிருத்தல் தகாது. பெரும் மாண்பு பெற்ற மக்கள் உடம்பினால் செய்யக்கூடிய நல்வினைகளைக் காலம் தாழ்த்தாது செய்து முடிக்க வேண்டும். அவை முக்தியுலகத்தில் என்றும் நீங்காத பேரின்ப வாழ்வைத் தேடி தரும் என்பதை,

*"மக்களால்ஆய் பெரும்பயனும் ஆயம்கால*
*எத்துணையும் ஆற்றபல ஆனால் - தொக்க*
*உடட்பிற்கே ஒப்புரவு செய்து ஒழுகாது உம்பர்*
*கிடந்து உண்ண பண்ணப்படும்"(நாலடியார், 37)*

என்பது நாலடியாரின் கருத்து ஆகும்.

**ஈகை - விளக்கம்**

பிற உயிர்கள் வாடும்போது அவற்றிற்காக இரங்கும் இயல்பு மனிதனிடமிருந்து இயற்கையாக வெளிப்படுகின்றது. இதனை வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் வார்த்தையிலிருந்தும் தமிழ் இலக்கியமான நாலடியாரின் பாடலில் இருந்தும் அறிய முடிகின்றது.

**ஈகையை வலியுறுத்தல்**

மரணத்தைவிடக் கொடுமையானது, இருந்தும் இரப்போர்க்குக் கொடுக்காதிருத்தல் ஆகும். அவ்வாறு ஈகை குணம் இல்லாதவன் இறந்தவனாகக் கருதப்படுவான். இதனை நாலடியார் செல்வம் இருக்கும் காலத்தில் வீணாக மேன்மேலும் பொருள் தேடாமல், இருக்கும் பொருளைத் தக்கோர்க்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பதை,

*"முன்னரே சாம்தான் முனிதக்க மூப்புஉள*
*பின்னரும் பீடழிக்கும் நோய்உள - கொன்னே*
*பரவமின் பற்றயின் பாத்துண்மின் யாதும்*
*கரவன் கைத்து உண்டாம் போழுது"*

*(நாலடியார்,92)*

என்ற பாடலின் மூலம் உணர்த்தியுள்ளது.

**சாதலும் இரத்தலும்**

வாழ்க்கையில், இல்லை என்போருக்கு மனம் கோணாமல் இருப்பதிலிருந்து சிறிது கொடுப்பதாகும் எனும் நாலடியார் கருத்திற்கேற்ப நாலடியாரில் சமண முனிவர்கள்,

*"மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்கு*
*உறுமாறு இயைவ கொடுத்தல் வறுமையால்*
*ஈதல் இசையாது எனினும் இரவாமை*
*ஈதல் இரட்டி உறும்"(நாலடியார்,95)*

என்று விளக்குகின்றார்கள். தாம் பிறர்க்குக் கொடுப்பதினால் நன்மை விளையும், பயனை எதிர்பார்த்துக் கொடுப்பாரின் செயல் சிறந்ததாகாது. தம்மிடம் வந்து கேட்பவர்களுக்குத் தம்மால் கொடுக்கக்கூடிய பொருளைக் கொடுக்க வேண்டும். தம்முடைய ஏழ்மையினால் தாம் பிறர்க்கு எப்பொருளும் கொடுக்க இயலாவிடினும் தாம் பிறர்பால் சென்று இரவாது இருப்பது பிறர்க்கு கொடுத்தலைக் காட்டிலும் இரு மடங்கு தகுதியுடையதாகும்.

**சினம் - விளக்கம்**

மனிதர் தம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழும்போது அவர்களின் வாழ்வியல் வெற்றியை ஈட்டுகின்றனர். அவ்வாறன்றி, உணர்வுகள் தம்மை ஆட்சி செய்ய தாம் அவற்றினை அடக்கி ஆளாமல் விட்டுவிட்டால் பெரும்பழி வந்து சேரும். சினம் என்னும் தீப்பண்பை ஒவ்வொருவரும் கட்டுபடுத்தி வாழ வேண்டும். நாலடியார் மேன்மக்கள், கீழ்மக்கள் கொள்ளும் சினம், சினத்தினால் தோன்றும் அழிவு போன்றவற்றை எடுத்துக் கூறுகின்றது.

**பெரியோர் சினம் தவிர்த்தல்**

இன்றைய உலகில் பலர் தேவையில்லாமல் கோபம் கொள்கின்றனர். எளிதில் சினங்கொள்பவன் மதிகேடானதைச் செய்து பல நீங்கிற்கு ஆளாவான் என்ற கருத்தை உணர்ந்த பெரியோர்கள் சினம் கொள்வதினைத் தவிர்த்தன. இதனை நாலடியார்,

*"தண்டாச் சிறப்பின் தம் இன்னுயிரை தாங்காது*
*கண்ட உழி உல்லாம் துறப்பவோ மண்டி*
*அடிபெயராது ஆற்ற இளி வந்த போழ்தின்*
*முடிகிற்கும் உள்ளத் தவர்"(நாலடியார், 62)*

என்ற பாடல் வரிகளின் மூலம் விளக்கியுள்ளார். தாம் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்றி முடிக்கவல்ல ஊக்கமுடைய பெரியவர்கள், கோபத்தை பொறுத்துக் கொள்வர்.

**மேன்மக்கள் கொள்ளும் சினம்**

சினம் கொள்வதை ஒழித்த நிலையினை நாலடியார் பாடலொன்று,

*"கூர்த்துநாய் கௌவிக் கொள்ளக்கண்டும்*
*தம்வாயாற்*
*போர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை*
*நீர்த்தன்றிக்*
*கீழ்மக்கள் கீழாய செல்லியக்காற் சொல்பவோ*
*மேன்மக்கள் தம்வாயால் மீட்டு"(நாலடியார், 70)*

என்ற அடியினால் விளக்குகின்றது. கோபமுடன், நாய் தன்னைக் கடித்தாலும் அந்த நாயைத் திருப்பி கடித்தவர் எவரும் இல்லை. அதுபோல அறிவற்றோர் கீழான சொற்களைக் கூறினாலும், மேன்மக்கள் கோபம் கொள்ளாமல் தம் வாயால் அத்தகைய தாழ்ந்த சொற்களைக் கூற மாட்டார்கள். இவ்வாறு கோபம் எவ்வளவு கொடியது என்றும், சான்றோர் கோபம் கொள்ள மாட்டார்கள் என்றும், கோபம் தன்னையே சுடும் என்பதையும் நாலடியார் கூறுகிறது.

**முடிவுரை**

இவ்வாறு நாலடியார் எக்காலச் சூழலிலும் வாழும் மனிதர்களின் வாழ்வியல் விழுமியங்களை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. நாலடியார் விழுமியங்களை மக்கள் கடைபிடிக்க வேண்டும். இவற்றைத் தம்முடைய வாழ்க்கையில் கடைபிடிப்பதன் மூலம் இன்பமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழலாம். இதனை அக்காலத்தில் மக்கள் கடைபிடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை நாலடியாரில் காணப்படும் விழுமியங்கள் விளக்கிக் கூறுகின்றன.

**துணைநூற் பட்டியல்**


1. இராணி பிரகாஷ், பேரா. ப.த., மற்றும் ஐவர்(ப.ஆ), அற இலக்கியம் பன்முகப் பார்வை, அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரி, சென்னை, 2014
2. இராம சுப்பிரமணியன், வ.த.,(உரை), நாலடியார், திருமகள் நிலையம், சென்னை, 2000
3. இராமலிங்க அடிகள், திருவருட்பா உரைநடை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2014
4. நடராசன், புலவர் பி.ரா., திருமந்திரம், தொகுதி 1, திருமகள் நிலையம், சென்னை, 2017
5. வெங்கடேசன், முனைவர் கு.,மற்றும் மூவர்(பதிப்பாசிரியர்), அற இலக்கியத்தில், வாழ்வியல் விழுமியங்கள், செம்மூதாய் பதிப்பகம், சென்னை, 2013